# உலகச் சுற்றுலா நாள்
## 27.09.2007
## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

இன்று உலகச் சுற்றுலா நாள்

சுற்றுலா என்பது,
இடங்களைத் தெரிந்து கொள்வது மட்டுமல்ல;
இதயங்களை அறிந்து கொள்வதும் தான்.
உணவை நுகர்வது மட்டுமல்ல;
உணர்வைப் பகிர்வதும் தான்.
அலைகளை தரிசிப்பது மட்டுமல்ல;
கலைகளை இரசிப்பதும் தான்.
பாட்டைக் கேட்பது மட்டுமல்ல;
பண்பாட்டைக் காப்பதும் தான்.

திறந்த மனத்துடன் சுற்றுலா செல்பவர்கள்,
இனிய அனுபவங்களுடன் திரும்பி வருகிறார்கள்.

அவர்கள் உள்ளம் கடற்கரையாய் விரிந்தும்,
விண்வெளியாய் உயர்ந்தும்
உவகையுடன் துள்ளிக் குதிக்கிறது.

சுற்றுலா பெருந்தன்மையை வளர்க்கிறது,
தனித்தன்மையைக் காப்பாற்றுகிறது.

சுற்றுலாவினால்,
இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு;
கலைஞர்களுக்கு வாய்ப்பு,
தொல்லியல் சின்னங்களுக்குப் பாதுகாப்பு,
வணிகர்களுக்கு வர்த்தகம்,
பொதுமக்களுக்குக் கட்டமைப்பு வசதி,
அரசுக்கு அந்நியச் செலாவணி,
நாடுகளிடையே நட்புறவு.

வருகின்ற விருந்தினரைப் போற்றி,
சுற்றுலாத் தலங்களின் தூய்மையைப் பேணி,
பயணிகளிடம் வாய்மையைக் கடைப்பிடித்து,
நம் தமிழகம் உலகத்தின் ஒப்பற்ற சுற்றுலாத்தலமாக
ஓங்கி ஒலிக்கப் பாடுபடுவோமாக.